**நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டம் - 2023**

-----------------------------------------------------------------------------------------

நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திட்ட 2015 நவம்பர் 06 ஆந் திகதிய 5685 - எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் பட்டோலை ஐஐஇ பிரிவு ஐஐ (சீ) (3) மற்றும் 2010 யூலை 31 ஆந் திகதிய சர்வதேச அபிவிருத்தி சங்கத்தின் கடன் மற்றும் மானியங்களின் பொது நிபந்தனைகளின் 4.09 (ஆ) ஆம் உறுப்புரை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் அமைசசாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் குழாயிடப்பட்ட தண்ணீர் சேவைகளிற்கும் முன்னேற்றப்பட்ட சுகாதாரத்திற்ம் அணுகுவழிகளை அதிகரித்தலும் ஒன்றிணைந்த நிறுவனங்களின் இயலளவை வலுப்படுத்துவதும் செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நகர, கிராமிய மற்றும் பெருந்தோட்ட நீர் வழங்கல் மற்றும் சுகாதார திட்டங்களின் புனரமைப்பு மற்றும் விரிவாக்கல், தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் இயலளவை வலுப்படுத்தல், பயிற்சியளித்தல் மற்றும் தண்ணீர் தரத்தினை அடையாளமிடல் ஊடாக துறைகளின் இயலளவை கட்டியொழுப்புதல் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் என்ற பெயருடைய 04 கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 27,590 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 183.90 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 24,750 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 165 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 2,840 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கம் மற்றும் சமூக பங்களிப்பு ஊடாக நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2015 திசெம்பர் 07 இல் தொடங்கியிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2023 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் பந்தி 2 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் பேணப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம் 2023 திசெம்பர் 27 இல் பெறப்பட்ட நேரடிக் கொடுப்பனவுகள் தொடர்பில் ஐ.அ.டொலர் 78,523 இற்கு சமமான ரூபா 26 மில்லியன் கைதவிர்ப்புகள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் பதியப் பட்டிருக்கவில்லை. ஆகவே, உலக வங்கி கடன் தொகை மற்றும் நடைபெறும் மீதிகள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 26 | 2024 சனவரியில் திறைசேரியிடமிருந்து ரூபா 26 மில்லியன் தொகை உறுதிப்படுத்தப்பட்டது. இது 2024 நிதியாண்டில் கணக்கீட்டு முறைமையில் தவறுதலாக பதியப்பட்டுள்ளது. | சகல கைதவிர்பபுகளும் கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்ந்த நேரத்தில் பதியப்பட வேண்டும். |
| (ஆ) | உலக வங்கி முற்பணக் கணக்கு தொடர்பான மீள்மதிப்பீட்டு இலாபம் உலக வங்கி முற்பணக் கணக்கிற்கு பதிலாக புறமபான மீள்மதிப்பு இலாப கணக்கிற்கு சீராக்கப்பட்டிருந்தது. ஆகவே, ரூபா 1,785 மில்லியன் உலக வங்கி முற்பணக் கணக்கு நிதிக்கூற்றுக்களில் தவறுதலாக நடைமுறைச் சொத்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 1,785 | ஒவ்வொரு மாத இறுதியிலும் இலங்கை மத்திய வங்கியால் டொலர் மீள் மதிப்பீடு செய்யப் பட்டுள்ளதுடன் அதன் பெறுமதி உலக வங்கி காசேடு மற்றும் மீள்மதிப்பீட்டு இலாபம் அல்லது நட்டக் கணக்கிற்கு பதியப்பட்டிருந்தது. மீள்மதிப்பீட்டு இலாபம் செயற்திட்டத்தில் ஏற்படுகின்ற செலவுகள் தொடர்பில் ரூபா பெறுமதி மாத்திரம் செலவினமா இருக்க முடியும். எனவே, உலக வங்கி வரவு மீதியாக காட்டியுள்ளது. செயற்திட்டத்தின் பூர்த்தியின் பின்னர் நாங்கள் இறுதி கணக்கில் சீராக்கல் தொடர்பில் செய்ய வேண்டும். | மீள்மதிப்பீட்டு இலாபம் உலக வங்கி முற்பணக் கணக்கிற்கு சரியாக பதியப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | முன்னைய ஆண்டு கடன்கள் மீது 110 செய்யப்பட்ட வட்டியை திருத்துவதற்கு ரூபா 110 மில்லியன் தொகையான நாட்குறிப்பேடு அனுமதிக்கப் பட்டுள்ளதுடன் ரூபா 9,068 மில்லியன் தொகையான நாணயமாற்று வீத இலாபம் அவை செயற்திட்டத்தின் பணமல்லா விடயங்களாக இல்லாத போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதியல்லாத நடவடிக்கை யிலிருந்தான காசுப் பாய்ச்சலாக வெளிப்படுத்தப்பட்டது. | ரூபா 110 மில்லியன் முன்னைய ஆண்டில் சீராக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் உரிய ஆவணங்கள் இணைக்கப் பட்டுள்ளது. ரூபா 9,068 மில்லியன் 2023 ஆண்டு நிதிக் கூற்றில் நிதியல்லா நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்ச்சலாக காட்டப்படுகின்றன. | நேரற்ற முறை அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்த காசுப் பாய்ச்சலில் பணமல்லா விடயங்கள் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| ஆக்கக்கூறு | தாமதம் ∴ கணக்காய்வு அவதானிப்பு | தாமதத்திற்கான காரணங்கள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளின் பரிதுரைகள் |
|---|---|---|---|---|
| முப்பத்தியெட்டு நகர மற்றும் கிராமிய நீர் வழங்கல் செயற்திட்டங்கள், பொது சுகாதார, சுதேச வைத்திய சுகாதார மற்றும் பாடசாலை சுகாதார செயற்திட்ங்கள். | 01 முதல் 07 வரையான கால நீடிப்புகள் வழங்கிய பின்னர் முப்பத்தியெட்டு செயற் திட்டங்கள் தொடர்பில் 330 நாட்கள் முதல் 2,158 நாட்கள் வரையான வீச்சிலான கருத்திற் கொள்ளக் கூடிய தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. | செயற்திட்ட காலப் பகுதியின் முறையற்ற திட்டமிடல், பல ஒப்பந்தகாரர்களின் நலிவான செயலாற்றல், சுற்றாடல் மற்றும் மீள்குடியேற்ற பிரச்சினைகள், கோவிட்-19 நோய் தொற்று போன்றன தாமதங்களை ஏற்படுதியிருந்தது. | பெரும்பாலும் அந்த சகல செயற்திட்டங்களும் பகுதியளவு பூர்தியாக்கப்பட்டது. பரீட்சிப்பின் போது சொல்லப்பட்ட உப செயற்திட்டங்கள் திருப்திகரமாக செயற்படுகின்றன. நிர்மாண கைத் தொழிலில் ஒப்பந்தகாரர்களை ஆதரவளிப்பதற்கு சகல அளவீடுகளையும் அரசாங்கம் அறிமுகப்படுத்தி யிருந்தது. இன்னமும் ஏற்பட்ட தாமதங்கள் முழுமையாக தவிர்க்க முடியாதுள்ளது. சில சந்தர்ப்பங்களில் அத்தகைய கடினங்கள் குறைபாடுகளை ஏற்படுத்த ஒப்பந்த காரர்களிற்கு உதவுவதால் றுயுளுளுஜீ முறையாக கால நீடிப்புகளை பெற்றிருந்தது. | செயற்திட்டமானது எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தியாப்பட வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிதுரைகள் |
|---|---|---|---|
| (அ) | கேகாலை மாவட்டத்தில் அரனாயக்க கட்டம் 02 இன் புனரமைப்பு நிர்மாண வேலைகள் நீர்தேக்கம் மற்றும் தேக்க குளத்திற்கும் இடையில் குழாய்கள் குாயிடலிற்காக சமுதாய அடிப்படை அமைப்பகளிலிருந்தான பங்களிப்பு செய்யப்பட்டிருக்காததிலிருந்து 2024 சனவரி வரை பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. | தற்போது வேலைகள் சமுதாய அடிப்படை அமைப்புகளால் பெருமளவாக பூர்த்தியாக்கபபட்டது. | செயற்திட்டமானது எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்ட காலப் பகுதிக்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கொட்டியகும்புறு செயற்திட்டத்தில் குளம் மண் நிரப்புவதற்காக ஏற்பட்ட ரூபா 1.7 மில்லியன் கிரயம் அந்த குளத்தினை செயற்பாட்டிற்கு பயன் படுத்தாமையால் சிக்கனமற்றதாக இருந்தது. | செயற்திட்டமானது நிரப்புதல்களை செயற்படுத்துவதற்கு ஊடீழு உடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளது அத்துடன் மண் நிரப்புதல் செயற்பாட்டிற்கு தேவைப்பட்ட ஏதாவது மேலதிக வேலைகள் சமுதாய பங்களிப்பு பகுதியாக பயன்படுத்த வேண்டியுள்ளது. | சுத்தமான நீர் வழங்குவதற்கு மண் நிரப்புதல் பயன்படுத்த வேண்டும். |
| (இ) | நாட்டின் பொருளாதார நிலைகளால் விலைகளின் விலை வேறுபாடுகளால் ஒரு ஒப்பந்தகாரர் கோகாலை மாவட்டத்தில் ஐட்டியந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் தெரணியகல பிரதேச செயலாளர் பிரிவு என்பவற்றில் இரண்டு கிராமிய புனரமைப்புச் செயற்திட்டங்கள் கைவிடப்பட்டது. ஆகவே, அந்த இரண்டு ஒப்பந்தங்களிற்காகவும் ஏற்பட்ட கிரயம் பயனற்றதாக இருக்கும். | கோவிட்- 19 நோய் தொற்றும் மற்றும் பொருளாதார சிக்கல் என்பன காரணமாக நிர்மாணப் பொருட்கள் உயர்வாக உள்ளது. மேற்குறித்த காரணங்களால் வேலை நோக்கெல்லை குறைக்கப்பட்டது. | ஒப்பந்தங்கள் ஏற்பட்ட கிரயத்தை பயன்படுத்தவதற்கு அமுலாக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 250 நீர் இணைப்புகள் வழங்குவதன் மூலம் ரூபா 26 மில்லியன் பெறுமதியில் 2019 இல் பூர்த்தியாக்கப்பட்ட. றெடிமெலியட்ட கிராமிய நீர் வழங்கல் செயற்திட்டம் ஆகக்கூடிய நீர் அடர்த்தி 250 மிமீ பொருத்த வேண்டிய போதிலும் 1,805 மிமீ நீர் அடர்த்தியிலிருந்து இரண்டு ஆண்டுகளை விட மேலாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த நீர் வழங்கல் திட்டம் மூன்று ஆண்டுகளை விட மேலாக சமுதாயங்காளால் செயற்படுத்தப்பட்டது. தற்போது உயர் மட்டம் நீர் தேக்கத்தின் இயற்கையாகவே அதிகரித்துள்ளது. பிரதான வீதிகளிற்கு இடையில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை குழாய் வழிகள் தற்பொது செயற்பாட்டில் உள்ளன. ஆகவே, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை குழாய் வழி முறைமைக்கு CBO குழாய் முறைமையை சமூகம் வேண்டியிருந்ததுடன தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் CBO முறைமையை பொறுப் பேற்றிருந்தது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு முறைமை கையளிக்கின்ற நடைமுறையை நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஊவா பிரதேச ஆதார நிலையம் அனுமதிக்கான சபைத் தாளை சமர்ப்பிக்கின்ற செயற்பாட்டில் உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை அனுமதி பெற்ற பின்னர் CBO முறைமை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் பொறுப்பேற்றப்படும். | |
| (உ) | கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் ரூபா 599 மில்லியன் தொகையான பிரதான கொள்வனவு ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணங்கள் இல்லாமலும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 2.14.1 ஆம் பந்திக்கு முரணாகவும் உப கூறுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. ஆகவே, செயற்திட்டத்தின் சில கூறுகள் செயற்திட்டத்தின் முக்கிய வழியை கருத்திற் கொள்ளாமல் ஏனைய வேண்டப்பட்ட கூறுகளின் பூர்த்தியாக்கலிற்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் சில சொத்துக்கள் பயன்படுத்த முன்னர் சேதமாக்கப்பட்டிருந்தது. | கிளிநொச்சி நீர் வழஙகல் திட்டத்திற்கு குறுகிய கால கட்டமைப்பு, நிலவுகின்ற வடிவமைப்பிற்குள் உலக வங்கி நிதியளித்த செயற்திட்டத்தின் (WASSIP) கீழ் உப செயற்திட்டங்களை பூர்த்தியாக்குவது கட்டாயமாக உள்ள நிர்மாண வேலைகள் அமுலாக்கலை நிறைவேற்றும் கட்டத்தில் செய்யப்பட்டிருந்தது. அதன்போது உரிய பொதிக்காக தொடங்கப்பட்ட கொள்வனவு நடைமுறை நிலைபேறான குறித்த பகுதி வடிவமைப்பு பூர்த்தியாக்கப்பட்டன. | செயற்திட்ட நடவடிக்கைகளின் உப பிரிவுகளிற்காக பொறுப்புடைய உத்தியோகத்தர்கள் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளுடன் இணங்காமை என்பதை கண்டுபிடிப்பதற்கு புலனாய்வு செய்ய வேண்டும். |
| (ஊ) | செயற்திட்டமானது 2020 திசெம்பர் 31 பூத்தியாக்கப்பட்டு அந்த திகதியிலிருந்து கடன் திருப்பிச் செலுத்தல்கள் தொடங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் பட்டியலிடப்பட்டவாறு செயற்திட்டத்தை பூர்த்தியாக்குவதற்கு இயலாதிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 வரை செயற்திட்ட காலப்பகுதி நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2020 இலிருந்து பொது திறைசேரியால் ஐ.அ.டொலர் 18 மில்லியனிற்கு சமமான ரூபா 5,080 மில்லியன் கடன் திருப்பிச் செலுத்தல்கள் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடைய முடியாதிருந்தது. | மூல செயற்திட்ட முடிவுறுத்தல் கட்டத்தில் கோவிட்-19 நோய் தொற்கு, பொருளாதார சிக்கல் இறக்குமதித் தடை என்பன நிகழ்ந்தன. மேற்குறித்த காரணங்களின் அடிப்படையில் செயற்திட்ட காலப்பகுதி நீடிக்கப்பட்டிருந்தது. மேலதிக நிதியளித்தல் வேலைகளை அமுலாக்குவதற்காக செயற்திட்டக் காலப்பகுதி 2023.12.31 வரை நீடிக்கப்பட்டிருந்தன. | செயற்திட்ட நடவடிக்கைகள் நலனாளிகளின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதற்கு நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | ரூபா 551 மில்லியன் தொகையான சமுதாய பங்களிப்புகள் பெறப்பட்டிருக்காததுடன் செயற்திட்ட நெறிப்படுத்தல் ஆவணங்களின் 38 ஆம் பிரிவில் வேண்டப்பட்டவாறு புதிய கிராமிய நீர் வழங்கல் செயற்திட்டங்கள் மற்றும் கிராமிய நீர்வழங்கல் புனரமைப்புச் செயற்திட்டங்கள் தொடர்பில் பதியப்பட்டிருக்கவில்லை. பௌதீக பரிசோதனைக் காலத்தில் மலையாளபுரத்தின் குழாயிடல் வேலைகளிற்காக சமுதாய பங்களிப்புகள் ரூபா 52 மில்லியன் தொகையான மதிப்புடையதென அவதானிக்கப்பட்டது. | வட மாகாணத்தில் மக்கள் குடியேற்ற பிரச்சனைகளை கருத்திற்கொள்கையில் சமுதாயப் பங்களிப்பு என்பன கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கலைபட்டிருந்தது. | விசேட காரணங்கள் இல்லாதிருப்பின் செயற்திட்ட நெறிப்படுத்தல் ஆவணங்களின் நிபந்தனைகளிற்கு இணங்கியொழுக வேண்டும். |
| (ஏ) | ஒப்பந்த ஆவணங்களின் 43 ஆம் நிபந்தனைக்கு முரணாக செயற்திட்டமானது கிளிநொச்சி மாவட்ட செயற்திட்டங்களிற்காக நேரடியாக பதின்நான்கு உப ஒப்பந்தகாரர்களிற்கு ரூபா 19 மில்லியன் செலுத்தியிருந்தது. | ஒப்பந்த நிபந்தனையின் 8.1 ஆம் உட்பிரிவு ஊழியரால் நேரடியாக உப ஒப்பந்தகாரர்களிற்கு செய்யப் படுகின்ற கொடுப்பனவுகளிற்காக சாத்தியமானளவு பாதுகாப்பு இருக்கவில்லை. உப ஒப்பந்தகாரர்களிற்கு ஏதாவது குறித்துரைக்கப்பட்டிருக்காத கொடுப்பனவுகளை செய்யப்படின் ஆனால், ஒப்பந்தகாரர்களிற்கான குறிப்புகள் அந்த உட்பிரிவு 43 உடன்பட்டுள்ளது கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட சில ஒப்பந்தகாரர்களில் WASSIP ஆனது உப ஒப்பந்தகாரர் / காரர்களிற்கு நேரடியாக கொடுப்பனவு செய்வதற்கு உடன்பட்டிருந்தது. ஆனால் அந்த உப ஒப்பந்தகாரர் / காரர்களின் செயலாற்றலை உறுதிப் படுத்துவதற்கு விதிவிலக்கான பரிந்துரைகளில் பிரதான ஒப்பந்தகாரரின் நடவடிக்கைகள் முக்கியமான பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கவில்லை என உறுதிப்படுத்த வேண்டும். | ஒப்பந்தகாரர்களிற்கு கொடுப்பனவு செய்யும் போது ஒப்பந்த நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஐ) | கிளிநொச்சி மாவட்டத்தில் ரூபா 84 மில்லியன் பெறுமதியில் சுத்திகரிப்பு பொறி பொருத்தலின் ஒப்பந்தம் மற்றும் பரந்தன் இந்து மகாவித்தியாலத்தில் ரூபா 2.3 மில்லியன் பெறுமதியில் பாடசாலை சுகாதார ஒப்பந்தம் என்பவற்றின் பூர்த்தியாக்கலின் தாமதங்களிற்காக செயற்திட்டத்தால் தாமதக் கட்டணங்கள் கோரப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபையின் குப்பைகள் கொட்டும் பகுதியில் கிளிநொச்சி சுத்திகரிப்பு பொறி நிர்மாணிக்கப்பட்டது. ஆகவே, காலத்திற்கு காலம் வேலைத்தளம் பல இடையூறுகள் மற்றும் பாரிய மழை, பொறிக்கும் நுழையும் வீதி முழுமையாக வெள்ளத்தால் மூடப்பட்டமை மற்றும் சில நாட்களில் வெள்ளமட்டம் | ஒப்பந்த நிபந்தனைகளுடன் இணங்கியொழுக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பந்த நிபந்தனைகளை மீறுபவர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உயர்வாக உள்ளமை என்பவற்றினால் முடப்பட்டிருந்தது. பரந்தன் இந்து மகா வித்தியாலத்தில் நீர்தேக்க தொட்டி நிர்மாணித்தில் தாமதத்தால் உயர்ந்த நீர்க் கீழ் நீர் அட்டவணை பாதிக்கப்பட்டிருந்தது. ஆகவே, செயற்திட்டமானது ஒப்பந்தகாரர்களிற்கு கால நீடிப்பு வழங்கியிருந்தது. | |
| (ஒ) | மொத்த செயற்திட்டத்திலிருந்து ரூபா 695 மில்லியனில் அல்லது 33.91 சதவீதத்தில் முழங்காவிலின் ரூபா 236 மில்லியன் பெறுமதியான நீர் வழஙகல் செயற்திட்ட வேலைகள் செயற்திட்டத்தால் விடுபட்டிருந்ததுடன் மேலதிக வேலைகளிற்காக ரூபா 29 மில்லியன் மற்றும் விசேட வீத பட்டியல் வேலைகளிற்காக ரூபா 238 மில்லியன் என்பன கடுமையான செயற்திட்ட நோக்கெல்லை மாற்றம் மற்றும் புதிய கொள்வனவை மேற்கொள்ளாத போதிலும் செயற்திட்ட கிரயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. | முழங்காவில் நீர் வழங்கல் செயற்திட்டத்தின் குழப்பத் தன்மை மற்றும் வேலைத்தள நிலைகள் மற்றும் கருத்திற்கொள்ளவேண்டிய முரண்தொகையொன்றின் ஏனைய காரணங்கள் என்பன காரணமாக செயற்திட்டத்தின் திருப்திகரமான பூர்த்தியாக்கலிற்காக அவசியத்தை அறிமுகப்படுத்த வேண்டியிருந்தது. சில BOQ விடயங்களின் அளவீடுகளை விஞ்சியருந்ததனால் மேலதிக வேலைகள் விளைந்தது. ஏனையவற்றில் நோக்கெல்லை மாற்றம் அல்லது ஏதாவது டீழுஞ விடயங்கள் மாற்றமடைந்தமையால் விசேட வீத பட்டியல் வேலைகள் (SSR) விளைந்தன. பொதுவாக SSR உள்ளபோது பின்னர் விடுபடுதல்கள் ஏற்படும். | திட்டம், தேவையற்ற முரண்கள் மற்றும் கிரயங்களை தவிர்ப்பதற்கு பாதீடுகளையும் செய்வதற்கு முன்னர் சாத்தியவளக் கற்கை செய்யப்பட வேண்டும். |
| (ஓ) | செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட செயலாற்றல் அறக்கையின் பிரகாரம் ரூபா 2,340 மில்லியன் பெறுமதியான பதினைந்து பௌதீக ரீதியாக பூர்த்தியாக்கபபட்ட செயற் திட்டங்களின் நிதி முன்னேற்றம் இடைக்கால கொடுப்பனவை (IPC) அனுமதிப்பதில் தாமதம், IPC சமர்ப்பிப்பதில் தாமதம் மற்றும் ஒப்பந்தகாரர் மூலமான முரண் கட்டளை என்பன 0 முதல் 66 சதவீமான வீச்சில் இருந்தது. | WASSIP இற்கு ஒப்பந்தகாரருடைய இடைகால கொடுப்பனவு விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதிலும் கணக்கிட முடியாத காரணங்களால் WASSIP உத்தியோகத்தர்களால் IPC ஐ வழங்குவதிலும் தாமதங்கள் இருந்தது என நாங்கள் உடன்படுகின்றோம். | தாமதக் கட்டணங்கள் மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்களை தவிர்ப்பதற்கு தீர்ப்பனவு நடைமுறையை நிறைவேற்ற வேண்டும். |
| (க) | நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சால் வெளியிடப்பட்ட நீர் மற்றுமு் சுகாதார துறை கைநூலில் உள்ளடக்கப்பட்ட விரிவான உபாய திட்டம் மற்றும் வீதி வரைபடம் என்பவற்றின் பிரகாரம், நீர் வழங்கல் மறறும் சுகாதார முன்னேற்ற செயற்திட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட வளங்களின் பிரகாரம் 2020-2030 வரையான காலத்தின் போது மொனறாகலை, கிளிநொச்சி மற்றும் | மொனறாகலை STP இன் நிர்மாணம் 2020 இல் தொடங்கப்பட்டது. தற்போது பரீட்சிப்பில் உள்ளது. எவ்வாறாயினும், பிரதான சுகாதார திட்டம் மற்றும் வீதி வரைபடம் 2021 ஒக்தோபர் 19 இல் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே, அந்த மூன்று STP செயற்திட்டங்கள் உரிய உள்ளூராட்சி அதிகாரசபைகளால் | 2020 - 2030 வரையான தேசிய திட்டத்திலிருந்து செயற்திட்டத்தால் வேண்டுகைகள் இனங்காணப்பட்டிருந்தது . விருத்திசெய்யப்பட்ட தேசிய திட்டத்திற்கு எதிராக அந்த சுத்திகரிப்பு பொறிகள் ஏன் இதனை புலனாய்வு செய்ய வேண்டியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | முல்லைத்தீவு மாவட்டங்களிற்காக சுத்திகரிப்பு பொறி தேவை இருக்கவில்லை. எவ்வாறாயினும், செயற்திட்டமானது அந்த மாவட்டங்களிலுள்ள சுத்திகரிப்பு பொறிக்காக ரூபா 345.53 மில்லியன் முதலீடு செய்திருந்ததுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் பூர்த்தியாக்கப்பட்ட சுத்திகரிப்பு பொறி சுத்திகரிப்பு பொறியின் நுழைவு வீதி பூர்த்தியாக்காமையால் 2023 பெப்ரவரி மாதத்திலிருந்து செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செய்யப்பட்ட வேண்டுகையில் பிரதான சுகாதார திட்டத்தை அறிமுகப்படுத்த முன்னர் மற்றும் அந்த நகர பகுதிகளில் வெளியேற்றும் கழிவுகளை பாதுகாப்பாக அகற்றுவதற்காக தேவைகளை மதிப்பிடுவதற்கு முன்னர் தொடங்கப்பட்டிருந்தது.<br>கிளிநொச்சி STP இற்கான நுழைவு வீதி பூர்த்தியாக்கல் கட்டத்தில் உள்ளது. அதேநேரம் தற்காலிக நுழைவு வீதி பூர்த்தியாக்கல் STP இற்கு சேற்றினை ஏற்றியிறக்க செய்யப்பட்டிருந்தது. | |
| (கா) | நசெயற்திட்ட காலத்தின் போது 07 மாவட்டங்களில் நிர்மாணிக்க வேண்டுமென பட்டியலிடப்பட்ட 24,000 மலசல கூடங்களில் 22,000 இற்கு திருத்தப்பட்டிருந்தது. 21,944 மலசல கூடங்கள் அல்லது 91 சதவீதம் மாத்திரமே பூர்த்த்தியாக்கப்பட்டிருந்தது. பெருந்தோட்ட 3,000 வீட்டு சுகாதார அலகில் 2,390 அலகுகள் அல்லது 79 சதவீதம் மாத்திரம் பூர்த்தியாக்கப் பட்டிருந்ததுடன் செயற்திட்ட காலப் பகுதியின் இறுதியின் திட்டமிடப்பட்ட 14 நிறுவன சுகாதார அலகுகளில் 07 நிறுவன சுகாதார அலகுகளில் மாத்திரமே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட இலக்கில் 56 தனிப்பட்ட கழிப்பறை நலனாளிகள் மாத்திரம் குடியிருப்பாளர்கள் கைவிடப்பட்டமை, மற்றும் நிர்மாண பொருட்களின் உயர்ந்த வீத வேறுபாடுகள் என்பன காரணமாக தவிர்க்கப்பட்டிருந்தது. பெருந் தோட்ட உப செயற்திட்டங்களில், 547 குடியிருப்பாளர்கள் செயற்திட்ட நிதிகள் பயன்படுத்தாமை, பொருட்களின் உயர்ந்த கிரயம் மற்றும் வறுமைக்கோட்டின் கீழுள்ள சில நலனாளிகள் என்பன காரணமாக தவிர்க்கப்பட்டிருந்தது. நிர்மாண பொருட்களின் உயர்ந்த வீத வேறுபாடுகள் காரணமாக நிறுவன சுகாதார இலகுகளில் 4 அலகுகள் மாத்திரம் தவிர்க்கப்பட்டிருந்தது. | தேவையற்ற கிரயங்களை தவிர்ப்பதற்கு ஆரம்ப கட்டத்தில் உண்மையான தேவையை மதிப்பிட்ட பின்னர் அடையவேணடிய இலக்கினை உருவாக்க வேண்டும். |
| (கி) | செயற்திட்டத்தின் ஆரம்ப செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், கேகாலை மற்றும் மொனறாகலை மாவட்டங்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் ஒவ்வொன்றும் ரூபா 250,000 இல் 84 விசேட தேவை நலனாளிகள் சுகாதார கூறுகள் நிர்மாணிக்க வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட காலப் பகுதி இறுதியில் கேகாலை மற்றும் மொனறாகலை மாவட்டங்களில் 48 கூறுகள் அல்லது 57 சதவீதம் மாத்திரமே நிர்மாணிக்கப் பட்டிருந்ததுடன் கிளிநொச்சி மாவட்டங்களில் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | ஆரம்பத்தில், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் விசேட தேவையான நபர்களிற்காக சுகாதார வசதிகள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும், செயற்திட்ட அமுலாக்கல் கட்டத்தின் போது செயற்திட்டமானது சுகதார வசதிகளை வழங்குவதற்கு அதே நலனாளிகளை சமூக சேவைகள் அமைச்சு இனங்கண்டிருந்ததென செயற்திட்டம் கருதியது. ஆகவே, செயற்திட்டமானது விசேட தேவை சுகாதார வசதிகளிற்காக இனங்கண்ட நபர்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. | தேவையற்ற கிரயங்களை தவிர்ப்பதற்கு நிழ்ச்சித்திட்டம் திட்டமிடப்படுகின்ற போது தேவைப்பட்ட மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (கீ) | செயற்திட்டமானது ஒப்பந்தகாரர்களிற்கு பல கால நீடிப்புகளை வழங்கிய பின்னரும் செயற்திட்ட காலப்பகுதியிலிருந்து 03 மாதங்கள் கடந்த பின்னரும் நகர வகை 2, கிரமங்கள் மற்றும் பெருந்தோட்ட வகுதிகளில் திட்டமிடப்பட்ட 61,925 அல்லது 80 சதவீத நீர் இணைப்புகளில் 49,423 மாத்திரமே அடையப்பட்டிருந்ததுடன் நகர வகை 1, கிரமங்கள் மற்றும் பெருந்தோட்ட வகுதிகளில் திட்டமிடப்பட்ட 21,702 அல்லது 69 சதவீத நீர் இணைப்புகளில் 15,051 மாத்திரமே அடையப்பட்டிருந்தது. | கிராமிய, பொருந்தேட்டம் இரண்டினதும் வீட்டு இணைப்பு களிற்கான இலக்கு 73,682 ஆக இருந்தது. 2024 மே 31 இல் உள்ளவாறு வீட்டு இணைப்புகளின் முன்னேற்றம் 62,767 அல்லது 85 சதவீதமாக இருந்தது. வீட்டு இணைப்புகளிற்கான இலக்கு 21,702 ஆக இருந்ததுடன் 2024 மே 31 இல் உள்ளவாறு வீட்டு இணைப்புகளின் முன்னேற்றம் 15,358 அல்லது 71 சதவீதமாக இருந்தது. செயற்திட்ட உத்தியோகத்தர்கள் கிராமிய மற்றும் பெருந்தோட்ட நீர் வழங்கல் திட்டத்தின் வீட்டு இணைப்புகளின் இலக்கினை அடைவதற்கு CBOs/EWHCSs உடன் சேர்ந்து வேலை செய்கின்றது. மேலும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நடமாடும் சேவைகளை நடாத்தியிருந்தது. | தேவையற்ற கிரயங்களை தவிர்ப்பதற்கு ஆரம்ப கட்டத்தில் அடையக்கூடிய இலக்குகள் தாபிக்கப்பட வேண்டும். |

### 3.3 வேலைத்தள வருகைகளின் போது செய்யப்பட்ட அவதானிப்புகள்

| இல | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிதுரைகள் |
|---|---|---|---|
| (அ) | உடுக்கொட மற்றும் கொட்டியாக்கும்புறவில் 195 சமுதாய அடிப்படை நிறுவனங்களின் (CBO) நீர் மாதிரிகளை பரிசோதிப்பதற்கு நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 8 மில்லியன் பெறுமதியான இரண்டு ஆய்வுகூடங்கள் பௌதீக பரிசோதனையின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்படுத்தப்பட்டிருக்காததுடன் இதன் விளைவால் CBO கள் காலத்திற்கு காலம் தரத்தை பரிசோதிக்காமல் நீரினை வழங்குகின்றது. | சகல ஆய்வுகூட உபகரணங்களும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு கையளித்திருந்தது. | 2024 யூன் 30 வரை முழுமையாக கையளிக்கப் பட்டிருக்கவில்லை. அந்த பயன்படுத்தப்படாத சொத்துக்களை பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சுத்தீகரக்கப்பட்ட நீர் மற்றும் சுத்திகரிக்கப்படாத நீர் மாதிரிகள் இரண்டினையும் பரிசோதித்ததின் விளைவால் கணக்காய்வு பரிசோதனை காலத்தில் கேகாலை மாவட்டத்தில் 13 கிராமிய நீர் வழங்கல் செயற்திட்டத்தின் 04 தவறாகவிருந்தது. | நீர் மாதிரிப் பரிசோதனை அடிப்படையில் இலங்கையின் தர நியமத்திற்குள் குடி நீர் தரத்தினை முன்னேற்றுவதற்காக சரியான நடவடிக்கை எடுப்பதற்கு ஊடீழு விழிப்புணர்வை தொடர்ச்சியாக WASSIP உத்தியோகத்தர்கள் கண்காணிக்கின்றனர். | காரணங்களை கண்டறிவதற்கும் சுத்தமான நீரை விநியோகிப்பதற்கும் அவசியமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம் தொடர்புபட்ட பிரச்சனைகள்**

| இல. | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிதுரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டமானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2019 மார்ச் 15 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை பிரகாரம், முகாமைத்துவ திணக்களத்தின் அனுமதி பெற்றுக்கொள்ளாமல் சேவை ஒப்பந்தத்தின் கீழ் பொறியியலாளர், முகாமைத்துவ உதவியாளர், அலுவலக உதவியாளர், நீரியல் பொறியியலாளர், பொறியிலாளர் உதவியாளர் (சிவில்) மற்றும் ஒப்பந்த உடன்படிக்கையின் கீழான பதவிகளிற்காக 17 ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | செயற்திட்டமானது பட்டியலிடப்பட்ட காலப்பகுதி பிரகாரம் பூர்த்தியாக்கப்பட்டது, ஆனால், அரசாங்கம் புதிய நியமங்களை தடை செய்திருந்தது. செயற்திட்ட நடவடிக்கைகள் தொடர்வதற்காக தேவையான பதவியணியினர் குறுகியகால சேவை ஒப்பந்தம் ஊடாக வாடகைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். | சுற்றறிக்கை ஏற்பாடுகளை கடுமையாக இணங்கியொழுக வேண்டும |
| (ஆ) | செயற்திட்ட பணிப்பாளர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2019 மார்ச் 05 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.3.2 ஆம் பிரிவின் பிரகாரம் வினைத்திறனான செயற்திட்ட முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு அவரினை முழு நேர அடிப்படையில் சேர்க்கப்பட்ட வேண்டிய போதிலும் 2020 நவம்பர் 05 இலிருந்து தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் பிரதி பொது முகாமையாளராக (மேல் வடக்கு) பதவியுயர்த்தப்பட்டிருந்தார். | பேதிய செயற்திட்ட பணிப்பாளரை நியமிப்பதற்கு உலக வங்கி மற்றும் அமைச்சிடமிருநது வேண்டுகை எதுவும் பெறப்பட்டிருக்கலில்லை. | சொல்லப்பட்ட சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல் பிரகாரம் முழு நேர செயற்திட்ட பணிப்பாளர் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |